# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை, (டிட்கோ வளாகம்), எழும்பூர், சென்னை 600 008.
தொலைபேசி .28411376, 28411378, 28411379 / தொலை நகல் : 28411377
email: tnerc@vsnl.net Website: www.tnerc.tn.nic.in

28–11–2008

## செய்திக்குறிப்பு

### மின்சார வாரியம் கோரிய கட்டணங்களை ஒழுங்குமுறை ஆணையம் குறைத்தது

தமிழ்நாடு மின்சார வாரியம், தற்போது நிலவும் மின் பற்றாக்குறையின் காரணமாக தொழிற்சாலை மற்றும் வணிக நிறுவனங்களின் மின்தேவை (னுநஅயனே) மற்றும் மின்சக்தி(ருநேசபல) பயன்பாடு ஆகியவைகளுக்கு 1–11–2008 முதல் சில கட்டுப்பாடுகளை விதித்தது. இந்தக் கட்டுப்பாட்டின் அளவிற்கு மேல் பயன்படுத்தும் அதிக தேவைக்கு (நுஒஉநளள னுநஅயனே) மின்சார வாரியம் முஏஹ ஒன்றுக்கு ரூபாய் 1500/– கட்டணம் விதிக்கப்படவேண்டும் எனக் கோரியுள்ளது. இந்தக் கட்டணத்தை ரூபாய். 900/– என மின்சார ஒழுங்குமுறை ஆணையம் குறைத்துள்ளது. மேலும், வாரியம் உயர்அழுத்த தொழில் நுகர்வோர்களுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் மின் சக்தியின் யூனிட் ஒன்றுக்கு ரூபாய்.14/– மிகைக் கட்டணமாக விதிக்க உத்தேசித்துள்ளது. இந்த மிகைக் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு ரூபாய்.10.50 ஆக ஒழுங்குமுறை ஆணையம் குறைத்து உத்தரவிட்டுள்ளது. உயர்அழுத்த வணிக நுகர்வோரை பொறுத்தவரை, மின்சார வாரியம் யூனிட் ஒன்றுக்கு ரூபாய்.20/– என்ற வீதத்தில் மிகைக் கட்டணத்தை விதிக்க உத்தேசித்துள்ளது. இதனை யூனிட் ஒன்றுக்கு ரூபாய்.15/–ஆக ஒழுங்குமுறை ஆணையம் குறைத்து உத்தரவிட்டுள்ளது.

மின்சார வாரியம், தாழ்வழுத்த டுகூஊகூ தொழில் நுகர்வோர்களுக்கு மிகைக்கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு ரூ.18.80 என்று விதிப்பதாக உத்தேசித்துள்ளது. இதனை ஒழுங்குமுறை ஆணையம் யூனிட் ஒன்றுக்கு ரூ.14.10 என்று குறைத்து உத்தரவிட்டுள்ளது. இதே போன்று தாழ்வழுத்த டுகூஊகூ வணிக நுகர்வோர்களுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.23.20 விதிப்பது என்று, மின்சார வாரியம் உத்தேசித்த தொகையை ஒழுங்குமுறை ஆணையம் யூனிட் ஒன்றுக்கு ரூ.17.40 என குறைத்து உத்தரவிட்டுள்ளது.

மின்சார வாரியம் மேற்கூறிய மிகைக் கட்டணங்களை 1–11–2008 முதற்கொண்டு அமல் படுத்த உத்தேசித்திருந்தது. கட்டுப்பாடுகளை 1–11–2008 முதல் அமல்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மிகைக் கட்டணங்கள் இன்று முதல் தான் வசூலிக்கப்படவேண்டும் என ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இரா. பாலசுப்பிரமணியன்
செயலாளர்